**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.10.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

## பொருள் : 1

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி 2019–20 ன் கீழ் பணி மேற்கொள்ள 30.07.2019 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்திற்கு தேவையான பாத்திரங்கள் மற்றும் கிரைண்டர் புதிதாக வாங்குதல் பணி | 2.00 இலட்சம் | வி.பி.என் பில்டர்ஸ், திருப்பூர் | 0.01% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.அய்யாசாமி, புன்செய்ப் புளியம்பட்டி | 0.01 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய வி.பி.என் பில்டர்ஸ், திருப்பூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.530/19/இ1)

**தீர்மான எண் :** 1056

**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) மு. சிவக்குமார் (பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.10.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

## பொருள் : 2 1057

இந்நகராட்சிகளில் நடைபெறும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம், டெங்கு காய்ச்சல் ஒழிப்பு, மழைநீர் சேகரிப்பு, வீட்டிற்கு ஒரு கழிவறை, பிளாஸ்டிக் ஒழிப்பு, மக்கும் குப்பை மக்காத குப்பை தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்த, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடித ந.க.எண்.482/2018/B3 நாள்.08.07.2019 ம் தேதிய கடிதத்தில் சென்னை, ஜி.ஜெயபால், திருமலை நாடக சபா குழு மூலம் ஏற்படுத்தலாம் என தெரிவித்துள்ளார். எனவே சென்னை, ஜி.ஜெயபால், திருமலை நாடக சபா குழுவினர் மூலம் இந்நகராட்சி பேருந்துநிலையம் மற்றும் மாதம்பாளையம் பிரிவு ஆகிய இரு இடங்களில் நடத்தி முடித்தமைக்கு ரூ.12,000/– வழங்க தனிஅலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1217/2019/எச்1)

**தீர்மான எண் :** 1057

**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) மு. சிவக்குமார் (பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.10.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

## பொருள் : 3

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் பொதுப்பிரிவில் உள்ள சி1 மற்றும் பி2 ஆகிய பிரிவு இருக்கைக்கு இரண்டு கணினிகள் மற்றும் பிரிண்டர் தேவைப்படுவதால், அதனை வாங்குவதற்கு அரசு நிர்ணயித்த விலையிலும் (GeM), அரசு அங்கீகாரம் பெற்ற **Spyder Technologies, Tiruppur** என்ற நிறுவனத்தால் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1.25 இலட்சத்தை விட ரூ.1,20,998.00 என்ற குறைவான விலைப்புள்ளி அளித்துள்ளார். எனவே விலைப்புள்ளி ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**
அ) அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2019/)**

**தீர்மான எண் :** 1058

**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) மு. சிவக்குமார் (பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.10.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

## பொருள் : 4

மாநில உயர் மட்ட குழு கூட்ட நடவடிக்கைகள் நாள்.13.08.2018 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். 22866/2018/பி3 நாள்.23.08.2018 இன்படி இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் 2018-2019 ஆம் ஆண்டு திட்டத்தில் கீழ்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தலைமை பொறியாளர்,நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் தொழில்நுட்ப அனுமதி எண்.336A/2018-19 நாள்.31.08.2018ன்படி தலைமை பொறியாளர் சென்னை அவர்களால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டது.

| Sl.No | Name of Work | Estimate Amount (Rs.in Lakhs) | ER No |
|---|---|---|---|
| 1 | Construction of Micro Compost Centre at Ward No. 10, Thillai Nagar with processing Capacity of 3 TPD in Punjai Puliampatti Municipality. | Rs.53.60 Lakhs | 336A/2018-19 |

இப்பணிக்கு 18.09.2018 அன்று மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 28.09.2018 அன்று இந்நகராட்சி செயல்முறை கடிதத்தின்படி வேலை உத்தரவு வழங்கப்பட்டது.

தில்லைநகர் பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் நுண் உயிரி மையம் (3 TPD) வேலை உத்தரவு வழங்கி கட்டிடம் கட்ட அஸ்திவாரம் (Earth work) பணி துவங்கப்பட்ட நிலையில், மேற்படி இடத்தில் நுண் உயிர் மையம் கட்டப்படுவதை தவறாக உரம் தயாரிக்கும் தொழிற்சாலை கட்டுவதாகவும் அதனை (Fertilizer Manufacturing Unit) சம்பந்தப்பட்ட மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திடம் அனுமதி பெறாமல் கட்டப்படுவதாக ஆட்சேபித்து WP.No. 28511/2018 மற்றும் WP.No. 33258/2018 சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு இடைக்கால தடை உத்தரவு 09.10.2018ல் பிறப்பிக்கப்பட்டது.

இடைக்கால தடை உத்தரவிற்கு 23.10.2018ல் எதிர்வாத உரையில் நகராட்சியால் உரம் தயாரிக்கும் தொழிற்சாலை கட்டப்படவில்லை, நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016ன்படி குப்பைகள் 100% அறிவியல் முறையில் அகற்றல் (Scientific Disposal) செய்யப்பட வேண்டும் எனவும், 100% குப்பைகளை தரம் பிரித்து வீட்டுக்கு வீடு நேரடியாக பெறப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கு இணங்க, தரம் பிரிக்கப்பட்டு மக்கக்கூடிய குப்பைகளை மட்டும் நுண் உயிரி மையத்தில் (3 TPD) உரமாக்க நகராட்சிக்கு சொந்தமான தில்லைநகர் பூங்காவின் பகுதி இடத்தில் தேர்வு செய்யப்பட்டது என எதிர்வாத உரை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

புன்செய்ப் புளியம்பட்டியில் நாள் ஒன்றிற்கு 4.50 மெட்ரிக் டன் மக்கக்கூடிய குப்பைகள் உற்பத்தியாகிறது. மொத்தம் 4.50 மெட்ரிக் டன் குப்பைகளில் 3.00 மெட்ரிக் டன்னை (3 TPD) நுண் உயிரி உரமாக்க வார்டு எண்.16 வாரச்சந்தையில் நுண் உயிரி மையம் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மீதம் உள்ள 1.50 மெட்ரிக் டன் மக்கக்கூடிய குப்பைகளை உரமாக்க தில்லைநகர் பூங்கா பகுதி இடத்தில நுண் உயிரி மையம் அமைப்பதனை ஆட்சேபித்து சென்னை உயர்நீதிமன்ற தடை உத்தரவு **(Interim Stay)** உள்ளது. இந்நிலையில் நகராட்சிக்கு சொந்தமான 22 ஏக்கர் பரப்பில் உள்ள வாரச்சந்தை வளாகத்தில் நுண் உயிரி மையத்தினை தில்லைநகர் பூங்கா இடத்திற்கு பதிலாக நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் மாற்றி அமைத்து கொள்ள அனுமதிக்காக வைக்கப்படுகிறது.
**அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம்.**
(ந.க.எண்.263/2018/இ1)

**தீர்மான எண் :** 1059

**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) மு. சிவக்குமார் (பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.10.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

## பொருள் : 5

நகராட்சி நிர்வாக ஆணையர் ,சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 684/2019/சி1 புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஆணையாளர் பொறுப்புகள் சத்தி நகராட்சி ஆணையாளர் திரு.ஆ.தாணுமூர்த்தி அவர்களை கூடுதலாக பொறுப்பு வகிக்குமாறு உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி ஆணையாளர் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொறுப்பின் 09.03.2019 முற்பகல் முதல் கூடுதலாக கவனித்து வருகிறார். எனவே , அரசாணை எண்.153 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை நாள் :05.12.2017-ன்படி உரிய விதிமுறைகளின்படி திரு.ஆ.தாணுமூர்த்தி நகராட்சி ஆணையாளர், சத்தியமங்கலம் அவர்களுக்கு கூடுதல் பொறுப்புபடி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.செலவுத்தொகையின் வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 684/2019/சி1)**

**தீர்மான எண் : 1060**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) மு. சிவக்குமார் (பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.10.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 6**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி தலைமை நீரேற்று நிலையம், அண்ணா நகர் நீரூந்து நிலையம் ஆகிய இடங்களில் குடிநீர் மின்மோட்டார்கள் இயக்க போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், மேலும் கணிணியில் தட்டச்சு செய்வதற்கு போதிய எழுத்தர் பணியிடங்கள் இல்லாத காரணத்தாலும் மேற்கண்ட குடிநீர் பணிகள் பார்க்க 4 நபர்களையும், கணிணி தட்டச்சு பணியர் 2 நபர்களையும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயத்த ஊதிய விகிதத்தில் அமர்த்தி கொள்ளவும், மேற்படி நபர்கள் தனியார் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி அமர்த்தி கொள்ள 30.05.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஆணையர் அவர்களின் செயல்முறைகளின்படி 02.06.2017 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. அதன்படி மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயத்த ஊதியம் ஆண்டுதோறும் வழங்கப்பட வேண்டும். 2019–2020 ஆம் ஆண்டிற்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயத்த ஊதிய தொகை ரூ.605 (அரசாணை எண்.12800/2019/G2, நாள்.20.09.2019) மற்றும் 2019–2020 ஆம் ஆண்டிற்கான TWAD Board (Unskilled Labour) நிர்ணயத்த ஊதிய தொகை ரூ.520 வழங்க மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

இந்நகராட்சியில் மேற்கண்ட பணிகள் செய்ய போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் மேற்படி நபர்கள் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயத்த ஊதிய விகிதத்தில் தனியார் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி 01.11.2019 முதல் 2019–2020 ஆம் ஆண்டிற்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் மற்றும் TWAD Board நிர்ணயத்த ஊதிய தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வழங்கப்பட்டது.

**தீர்மான எண் : 1061**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) திரு.மு.சிவக்குமார்,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.10.2019–ம் நாளன்று நடைபெற்ற
தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்

பொருள் : 7

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16ல் கோவை கார்டன் என்னும் பெயரில் கட்டுமான நிறுவனம் கட்டிடங்கள் கட்டி ( Individual House) விற்பனை செய்து வருகின்றது. இவ்விடத்தில் ஏறக்குறைய 54 கட்டிடங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் 15 கட்டிடங்கள் கட்டப்பட்டு உரிய வரிவிதிப்பு விதிக்கப்பட்டு புதிய குடிநீர் இணைப்பிற்காக விண்ணப்பங்கள் தனிநபரிடம் இருந்து பெறப்பட்டுள்ளன. மேற்கண்ட விண்ணப்பங்களுக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகராட்சிக்கு குடிநீர் கட்டணம் செலுத்தினால் புதிய இணைப்பு வழங்கக்கூடிய நிலையில் உள்ளது. ஆனால் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளும் பிரதான குழாய்கள் இல்லாததால் தனிநபர் குடிநீர் இணைப்பு வழங்க முடியவில்லை. இந்நிலையில் இவ்விடத்தைச் சேர்ந்த கோவை கார்டன் நிர்வாகத்தால் நகராட்சியில் சந்தைக்கடை மேல்நிலைத் தொட்டியிலிருந்து தங்களது செலவில் பிரதான குடிநீர் குழாய்கள் அமைத்து நகராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைப்பு செய்து பிற்காலத்தில் உரிமை எதுவும் கோரப்படாது எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் இப்பணிக்காக பிரமான பத்திரமும் தாக்கல் செய்து அனுமதியும் கோரியுள்ளனர். இப்பணியில் சாலைப்பழுது ஏற்படுவதை தங்களது பொருட்செலவில் சரிசெய்து தருவதாக தெரிவித்துள்ளனர். எனவே மேற்கண்ட பணிக்காக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1683/2019/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

அ)மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 1062**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) திரு.மு.சிவக்குமார்,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.10.2019—ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

பொருள் : 8

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில், 2018—19 —ம் ஆண்டு கணக்குகளை முடித்துத்தர ரூ.50,000/— மதிப்பீட்டிற்கு விலைப்புள்ளி கோர அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை ஏற்கலாம்.

**தீர்மான எண் : 1063**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) திரு.மு.சிவக்குமார்,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.10.2019—ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 9**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில், **2018—19** கணக்குகளை முடித்துத்தர விலைப்புள்ளி கோரப்பட்டதில், மதிப்பீட்டுத் தொகைக்கு விலைப்புள்ளி வழங்கிய திரு.A.அழகர்சாமி கொமாரபாளையம் என்பவரின் விலைப்புள்ளி ரூ.50,000/— ஏற்றுக்கொள்ள அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கியதை ஏற்கலாம்.

**தீர்மான எண் : 1064**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) திரு.மு.சிவக்குமார்,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.10.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 10**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு, திரு.கதிரேசன் என்பவரால் வரியில்லா இனத்திற்காக, வழங்கப்பட்ட காசோலை வங்கியில் போதிய இருப்பு இல்லாத காரணத்தால் திருப்பப்பட்டது. எனவே திரு.பி.கதிரேசன் என்பவரால் நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் (CRL.OP.No.27293/2017ல்) வழக்கு தொடர்ந்துள்ளதால், நகராட்சி சார்பாக நகராட்சியின் நிலை சட்ட வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த் அவர்கள் வழக்கு நடத்தி வருவதால், அதற்காக ஏற்படும் வழக்கு செலவினம் மற்றும் வழக்கு கட்டணம் ரூ.15,000/– தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.293/2008/அ1)

**தீர்மான எண் : 1065**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) திரு.மு.சிவக்குமார்,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

## புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.10.2019–ம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்

பொருள் : 11

ஈரோடு மாவட்டம் ஆட்சித் தலைவர் அவர்களின் அவசர குறிப்பாணையில் கிராம ஊராட்சி (ம) அவற்றின் பூகோல ரீதியிலான அமைவிடம், மக்கட் தொகை பெருக்கம் மற்றும் இதர காரணங்களின் பொருட்டு கிராம ஊராட்சியின் பேரூராட்சிகளாக தரம் உயர்த்தப்படுகின்றன அல்லது நகராட்சி / மாநகராட்சிகளுடன் இணைக்கப்படுகின்றன. எனவே, ஈரோடு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து கிராம ஊராட்சிகளிலும் மேற்படி தரம் உயர்த்தப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் அசையும் மற்றும் அசையா சொத்துக்களான

1. கிராம ஊராட்சி கட்டிடங்கள்
2. ஊராட்சி ஒன்றிய கட்டிடங்கள்
3. ஊராட்சி ஒன்றிய பள்ளிக்கட்டிடங்கள்
4. சமுதாய நலக்கூட்டங்கள்
5. மகளிர் சுய உதவிக் கட்டிடங்கள்
6. சிறுபாசன ஏரிகள்,குளங்கள் மற்றும் குட்டைகள்
7. இதர ஊராட்சி தொடர்புடைய புறம்போக்கு நிலங்கள்
8. ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் பெயரில் உள்ள நிலங்கள்
9. பல்வேறு வகையான அசையும் மற்றும் அசையா சொத்துக்கள்

ஆகியன அனைத்தையும் உடனடியாக தொடர்புடைய தரம் உயர்த்தப்பட்ட நகராட்சி,மாநகராட்சி மற்றும் பேரூராட்சி அமைப்புகளிடம் ஒப்படைத்து,அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களை பெற்றுக் கொண்டதற்கான ''உறுதி சான்றினை'' செப்டம்பர் 30–ஆம் தேதிக்குள் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)–க்கு அனுப்பி விட்டு அதன் நகலை அனுப்பி வைக்குமாறு அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ/கி.ஊ)களுக்கும் உத்திரவிடப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அவசரக் குறிப்பாணை–ன் படி பவானிசாகர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள புன்செய்ப் புளியம்பட்டி கிராமம் புல.எண் 46/1–ல் பொதுப்பணி தொழிலக கட்டிடங்கள் (சிமெண்ட் 2 மற்றும் தார்சு கட்டிடங்கள் 2 மொத்தம் நான்கு எண்ணிக்கை) மற்றும் கட்டிடங்களை சுற்றியுள்ள காலியிடங்கள் அனைத்தும் சேர்த்து ஆக மொத்தம் 1760 சதுர மீட்டர் (நீளம் 55 மீட்டர் மற்றும் அகலம் 55 மீட்டர் = 1760 சதுர மீட்டர்), பரப்பளவுள்ள நிலத்தினை பு.புளியம்பட்டி நகராட்சிக்கு ஒப்படைத்ததை நகராட்சி ஏற்றுக்கொண்டது.

பார்வை 3 மற்றும் 5–ன் குறிப்பாணையின்படி, புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லையில் கிராம ஊராட்சிகளிடம் உள்ள கீழ்க்கண்ட அசையும் மற்றும் அசையா சொத்துக்களான,

1. ஊராட்சி ஒன்றிய பள்ளிக் கட்டிடங்கள்
   அ) ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி சத்திரம் பள்ளி வளாகம்.
   ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி சத்தி மெயின் ரோடு.
   இ) ஊராட்சி ஒன்றிய ஆரம்ப பள்ளி இராமநாதபுரம்.
   ஈ) ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஜே.ஜே.நகர்.
2. மகளிர் சுய உதவிக் கட்டிடம்.
3. தினசரி காய்கறி கடை வளாகத்தில் மிகவும் பழுதடைந்து அபாயகரமான நிலையில் உள்ள கட்டிடத்தையும் கட்டிடம் சார்ந்த இடம்.
4. நூலக கட்டிடம்.

ஆகியன அனைத்தையும் உடனடியாக தரம் உயர்த்தப்பட்ட இந்நகராட்சியிடம் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் விபரத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** தட்சுப்பட்டறை ஒப்படைப்பு செய்வதை நகராட்சி சொத்து பதிவேட்டில் பதிவு செய்ய அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 1066
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) திரு.மு.சிவக்குமார்,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.10.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 12**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு எதிராக திரு.ஆறுமுகம் (லேட்) துப்புரவு பணியாளரின் வாரிசான அன்னாரின் தாயார் திருமதி.ராஜம்மாள் என்பவரால் நகராட்சிக்க எதிராக சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் (W.P.No.18724/2019) ல் வழக்கு தொடரப்பட்டது. மேற்படி, வழக்கில் நகராட்சி சார்பாக நகராட்சியின் நிலை சட்ட வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த் அவர்கள் வழக்கு நடத்தி வருவதால்,அதற்காக ஏற்படும் வழக்கு செலவினம் மற்றும் வழக்கு கட்டணம் ரூ.15,000/- தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.253/2018/சி1)**

**தீர்மான எண் :** 1067
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) திரு.மு.சிவக்குமார்,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.10.2019–ம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 13**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற வளர்ச்சி பணிகள் சம்பந்தமாக தினத்தந்தி நாளிதழில் (2018 – 2019 ஆம் ஆண்டு பணிகளுக்கான விபரங்கள்) தொழில் மலரில் விளம்பரம் வெளியிடவும், மேலும் இவ்விளம்பரத்திற்கு தேவையான விளம்பரத்தொகை ரூ.9425/- செலுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2019/இ1)**

**தீர்மான எண் :** 1068
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) திரு.மு.சிவக்குமார்,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.10.2019–ம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 14**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை வணிக வளாக கடை எண்.9க்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தாரிடமிருந்து புதிய மின் இணைப்பு பெற வருவாய் ஆய்வாளர் குறிப்பு வழங்கியுள்ளார். மேற்படி கடைகளில் மராமத்து பணிகள் மேற்கொள்ளவும் மேலும் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் மேற்படி கடைக்கு மின் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டிருந்தது. எனவே தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் இருந்து புதிய மின் இணைப்பு மற்றும் தேவையான மின்சாதனங்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 6,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 483/2019/இ1)

**தீர்மான எண் :** 1069
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) திரு.மு.சிவக்குமார்,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.10.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

பொருள் : 15

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி வட கிழக்கு பருவமழை, டெங்கு காய்ச்சல் மற்றும் கொசுக்களினால் ஏற்படும் தொற்று நோய் தடுப்பு பணிகள் தொய்வின்றி மேற்கொள்வதற்கு கீழ்காணும் உபகரணங்கள் அவசர அவசியமாக தேவைப்படுகின்றன.

1. புகை மருந்து அடிக்கும் இயந்திரம் - 3 எண்ணிக்கை
2. டார்ச் லைட் - 30 எண்ணிக்கை
3. கை உறைகள் - 60 எண்ணிக்கை
4. முகமூடி - 65 எண்ணிக்கை
5. மழைச் சட்டை (Rain Coat) - 20 எண்ணிக்கை
6. புல் வெட்டும் இயந்திரம் - 1 எண்ணிக்கை

இப்பொருட்களை TNSTC EMPLOYEE COOPERATIVE STORE,ERODE வாயிலாக கொள்முதல் செய்வதற்கும் இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.3 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 1768 /2019/எச்1)

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 1070
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) திரு.மு.சிவக்குமார்,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 10.10.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

பொருள் : 16

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் 41 ஒப்பந்த துப்புரவு பணியாளர்கள் Outsourcing முறையில் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களுக்கு தற்பொழுது ரூ.385/- தினக்கூலி வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது மாவட்ட ஆட்சியர் அவர்களின் ந.க.எண்.12800/2019/G2 நாள்.20.09.2019 எண்ணிட்ட தினக்கூலி நிர்ணய உத்தரவில் முழுநேர துப்புரவுப்பணியாளர்களுக்கு ரூ.490/- தினக்கூலியாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மாண்புமிகு தேசிய சபாய் கரம்சாரி ஆணைய உறுப்பினர் ஜெகதீஸ் கிர்மானி அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடத்திய ஆய்வுக்கூட்டத்தில் துப்புரவுப்பணியாளர்களுக்கு மாவட்டம் முழுவதும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவித்துள்ள தினக்கூலியினை வழங்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார். எனவே 01.10.2019 முதல் Outsourcing முறையில் பணியாற்றும் 41 ஒப்பந்த துப்புரவு பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலியினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மாவட்ட ஆட்சியர் மற்றும் மாண்புமிகு தேசிய சபாய்கரம்சாரி ஆணைய உறுப்பினர் அவர்களின் அறிவுரையை ஏற்று துப்புரவு பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1767/2019/எச்1)

**தீர்மான எண் :** 1071
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) திரு.மு.சிவக்குமார்,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 31.10.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள்</u> : 1**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை வணிக வளாக கடை எண்.9க்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தாரிடமிருந்து புதிய மின் இணைப்பு பெற வருவாய் ஆய்வாளர் குறிப்பு வழங்கியுள்ளார். மேற்படி கடைகளில் மராமத்து பணிகள் மேற்கொள்ளவும் மேலும் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் மேற்படி கடைக்கு மின் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டிருந்தது. எனவே தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் இருந்து புதிய மின் இணைப்பு மற்றும் தேவையான மின்சாதனங்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 6,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**
மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 483/2019/இ1)

**தீர்மான எண் :** 1072
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) திரு.மு.சிவக்குமார்,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 31.10.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

## பொருள் : 2

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், திறந்த வெளியில் மலம் கழித்தல், திடக்கழிவுகளை குறைத்திடுதல், கழிவுகளை மறுசுழற்சி செய்தல் மற்றும் கழிவுகளை உற்பத்தியாகும் இடத்திலேயே உரம் தயார் செய்தல் போன்றவைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்கு பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் M/S. SKY MAN POWER AGENCY, DINDUGUL என்ற நிறுவனம் மூலம் நியமனம் செய்யப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்தின் ஓராண்டு ஒப்பந்த காலம் 31.08.2019 உடன் முடிவடைவதால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண். 26458 / 2016 / P1, நாள் 19.09.2019ன் படி மேற்படி ஒப்பந்தகாலம் மேலும் 31.03.2020 வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.92/2018/எச்1)

**தீர்மான எண் :** 1073
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) திரு.மு.சிவக்குமார்,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 31.10.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

பொருள் : 3

இந்நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் 2018-19ன் கீழ் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் செயல்முறை கடிதம் ந.க.எண்.12981/2018/இ3 நாள்.17.07.2018 நிர்வாக அனுமதி மற்றும் முதன்மை பொறியாளர், சென்னை அவர்களின் தொழில்நுட்ப அனுமதி எண்.20308/2018/DO1 நாள்.16.08.2018 ஒப்பந்தப்புள்ளியின் படி வி.பி.என் பில்டர்ஸ், திருப்பூர் அவர்களுக்கு நகர்மன்ற தீர்மான எண்.815, நாள்.14.05.2018– ன்படி பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு உள்ளது.

மேற்கண்ட தார்சாலைப் பணிகள் மேற்கொள்ளும் போது தார்சாலையை நெடுஞ்சாலை உடன் இணைப்பதனால் சாலையின் முகப்பு அகலம் அதிகரித்துவிட்டது. எனவே பணியின் அவசியத்தை முன்னிட்டு கீழ்கண்ட மதிப்பீட்டில் வழிவகை செய்து அனுமதிக்கப்பட்ட அளவைவிட கூடுதலாக செய்யப்பட்டமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மதிப்பீட்டில் வழிவகை செய்து அனுமதிக்கப்பட்ட அளவைவிட கூடுதலாக செய்தது

| வ.எண் | மதிப்பீட்டில் செய்த இனம் | அனுமதிக்கப்பட்ட அளவு | கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட அளவு |
|---|---|---|---|
| 1 | Providing and laying 50 mm Consolidated thick Dense Bituminous Macadam | **302 க.மீ** | **302.31 க.மீ** |
| 2 | Providing and laying Hot Applied Thermo Plastic Compound | **259 க.மீ** | **261.18க.மீ** |

மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத புதிய இனங்கள்

| வ.எண் | மதிப்பீட்டில் செய்த இனம் | அனுமதிக்கப்பட்ட அளவு | கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட அளவு |
|---|---|---|---|
| 1 | ஏதும் இல்லை | | |

தேசிய நெடுஞ்சாலையில் அணுகு சாலையில் தேவைக்கு ஏற்ப மதிப்பீட்டிற்கு மிகாமல் மேற்கொண்டதையும், பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.485/2018/இ1)**

**அலுவலகக்குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மான எண் :** 1074

**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) திரு.மு.சிவக்குமார்,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.